**தேசிய அருங்கலைகள் பேரவை - 2019**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

தேசிய அருங்கலைகள் பேரவையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டம் மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தின் 20(3) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பேரவையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்களுக்கான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் போதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிர்வாகம் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

-------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை திருத்தம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பான நியமத்தின் 106 ஆம் பிரிவின் பிரகாரம் வருமான மற்றும் செலவின உருப்படிகள் பொருண்மையாக இருக்கையில் அவற்றின் தன்மை மற்றும் பெறுமானங்கள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைத்த வருமானத்தின் கீழ் மொத்தம் ரூபா 18,592,230 தொகை மற்றும் செலவினத்தின் கீழான மொத்தம் ரூபா 17,730,526 தொகை தொடர்பாக அவற்றின் தன்மை மற்றும் பெறுமானங்கள் என்பன வெவ்வேறாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | மதிப்பிடப்பட்ட தொகை பொருண்மையானதாக இருந்த போதும் இது ஒரு நிகழ்ச்சித்திட்டமாக இருந்ததால் ஒரு செலவினத் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 – 106 ஆம் பிரிவின் பிரகாரம் போதியளவு விபரங்கள் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் தொடர்பான நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது இலாபத்திற்கு தாக்கமளிக்கும் | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் உள்ளவாறான காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உள்ளவாறான காசு உட்பாய்ச்சல் கருத்திற் கொள்ளப்படாமல் நியமத்திற்கு முரணாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது. காசுப்பாய்ச்சல் கூற்று பரிசோதனைக்கு போதுமான எழுத்து மூல விளக்கங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளவாறான காசு வெளிப் பாய்ச்சல் மற்றும் காசு உட்பாய்ச்சல் அல்லாத செலவினம் இலாப / நட்டத்துடன் கூட்டுதல் அல்லது கழித்தல் மேற்கொள்ளப்பட்டது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ஏற்பட்ட வேறுபாடு காசுப் பாய்ச்சலுக்கு சீராக்கப்பட்டது. | கூற்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்கான எழுத்து மூல விளக்கங்களையும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் இறுதி இருப்பாக ரூபா 18,920,673 ஆன பெறுமதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் 47(அ) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட கிரய சூத்திரம் உட்பட இருப்பு கணிப்பிடும் போது பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கை தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | அருங்கலை பேரவையின் இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளும் போது கிரய சூத்திரமொன்று பயன்படுத்தப்படவில்லை. அத்துடன் கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டிய பெறுமதியில் எது குறைந்ததோ கணக்கிடப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் இருப்பு தொடர்பான கணக்கீடு கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 15 ஆம் இலக்க நியமத்தின் 14(C) பிரிவின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே பொருண்மையான வேறுபாடு குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப் பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 செலவின விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 5,298,258 ஆன விலகலொன்று தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பொருண்மையான வேறுபாடுகள் குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது ரூபா 5,828,720 தொகை முன்னைய ஆண்டின் சீராக்கங்களாக நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்களில் சீராக்கப்பட்டிருந்த போதும் குறித்த சீராக்கங்கள் தொடர்பான விபரங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது | நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அருங்கலைப் பேரவையின் நிதி நிலைமைக்கூற்றில் மொத்தம் ரூபா 137,938,889 தொகை ஆன அரச மானியங்களாக (Government Grant) பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த அரச மானியங்களை கணக்கீடு செய்தல் மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவது தொடர்பாக கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் அரச மானியங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை | நியமத்தின் பிரகாரம் அரச மானியங்களை கணக்கீடு செய்வதற்கும் அதற்காக கணக்கீட்டுக் கொள்கையொன்றை வெளிப்படுத்துவதற் கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 5,828,720 தொகையான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதை மீளாய்வாண்டின் போது சீராக்கும் போது குறித்த சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குரிய மூலதன பங்களிப்பு அரசின் பங்களிப்பு சேர்க்கப் படாமையால் மேற்குறித்த பெறுமதியில் அரசின் பங்களிப்பு குறைத்து நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது கிடைத்திருந்த ரூபா 7,412,490 ஆன மூலதன பங்களிப்புத் தொகை வருமானச் செலவினமாக இனங் காணப்பட்டதை மீளாய்வாண்டின் போது சீர் செய்யாமயால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த திரட்டிய பற்றாக்குறை மேற்குறித்த பெறுமதியிருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட சீராக்கங்கள் திரட்டிய அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு சீராக்கப்பட்டதுடன் அதன் வேறுபாடு மூலதன பங்களிப்பிற்கு சீராக்கம் செய்யப்பட்டது. | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குரிய மூலதன பங்களிப்பு சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். மேலும் வருமானச் செலவினம் கூடுதலாக பதிவு செய்யப்பட்டதை சீராக்கம் செய்ய வேண்டியதுடன் மீண்டுவரும் வருமானம் மற்றும் மூலதன பெறுவனவுகள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 964,269 ஆன மூலதன செலவினத்திற்குரிய அரசின் பங்களிப்பு வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் | வருமானச் செலவினங்கள் கூடுதலாக பதிவு செய்யப்பட்டதை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 964,269 ஆல் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 20 தளபாடப் பெட்டகங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,013,223 கூட்டுப்பெறுமதி கட்டிடங்களாக கணக்கீடு செய்தமையால் அச்சொத்துக்களுக்குரிய பெறுமானத் தேய்வு விகிதங்களின் வேறுபாடு காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு ரூபா 202,645 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் | கட்டிடங்கள் கணக்கு மற்றும் தளபாடங்கள் பொருத்திகள் கணக்கு என்பவற்றை சீராக்குவதற்கும் குறைவாக செய்யப்பட்ட பெறுமானத்தேய்வை சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டில் அருங்கலைப் பேரவையிடமுள்ள 96 பயிற்சி நிலையங்களின் பொருள் விற்பனையிலிருந்து உழைக்கப்பட்டிருந்த ரூபா 2,234,032 ஆன வருமானம் சேமிப்பு வங்கியின் 96 கிளைகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் அவ்வருமானம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. மேலே குறிப்பிடப்பட்ட வருமானம் அட்டவணையில் உள்ளடக்கப்படாத மேலும் 16 வங்கிக் கணக்குகளின் மீதிகள் என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உறுதிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் அவ்வங்கி கணக்குகளின் மீதிகளும் அட்டவணையிலிருந்து விடுபட்டிருந்தன. | பயிற்சி நிலையங்களில் காணப்படும் கணக்கு மீதிகள் இறுதிக் கணக்குகளுக்கு சீராக்கம் செய்யப்படாமல் இருந்ததுடன் அறிந்து கொள்வதற்காக மாத்திரம் பின்னிணைப்பொன்றாக சமர்ப்பிக்கப்பட்டது. இக்கணக்குகள் அனைத்தையும் மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பயிற்சி நிலையங்களுக்குப் பொறுப்பான உத்தி யோகத்தர்களின் சொந்த வங்கிக் கணக்குகளில் உள்ள பணத்தை பேரவையின் பெயரிலான வங்கிக் கணக்குகளுக்கு மாற்றுவதற்கும் அவ்விற்பனை வருமானத்தை கணக்குகளுக்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அருங்கலைப் பேரவையிடமுள்ள 112 பயிற்சி நிலையங்களில் உள்ள நிலையான சொத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை தீர்வுசெய்தன் பின்னர் சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயிற்சி நிலையங்களில் உள்ள நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 964,269 கூட்டுப் பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு ரூபா 11,873 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்பு சரியானது | பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு என்வற்றை சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 02 அரச வங்கிக் கணக்குகளுக்குரியதாக இனங்காணப்பட்ட வரவு மற்றும் செலவு மீதிகள் முறையே ரூபா 48,616 மற்றும் ரூபா 51,840 என்பன இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யாமையால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்படவில்லை. | இனங்காணப்படாத வரவு வைத்தல்களுக்குரிய சீராக்கம் 2020 பெப்ரவரி மாதம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டிலிருந்து வரும் மீதிகளுக்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். | வங்கிக் கணக்கிணக்க கூற்றுகளுக்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| நிலையான சொத்துக்கள் | 85,930,638 | 41,534,383 | 44,396,255 | வேறுபாடு நீண்டகாலமாக இருந்து வருவதுடன் சகல சொத்துக்கள் தொடர்பாக றெமதி மதிப்பீடு செய்யப்பட்டு வேறுபாட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிலையான சொத்துக்கள் மற்றும் அட்டவணைகளுக்கு இடையே வேறுபாடுகள் இனங்காணப்பட்டு சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமுலமான சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | நாட்குறிப்பு பதிவுகள் | 6,873,288 | 06 நாட்குறிப்பு பதிவுகளுக்காக துணை எழுத்துமூல சான்றுகள் மற்றும் துணை ஆவணங்கள் | நாட்குறிப்பு பதிவுகளுக்குரிய ஆதாரமான சான்றுகளை இதனுடன் சமர்ப்பிக்கின்றேன். | நாட்குறிப்பு பதிவுகள் சரியாக பரீட்சிப்பதற்காக சகல எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்காமல் இருந்ததுடன் போதியளவு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | 87,090,610 | மெய்மையாய்வு சபை அறிக்கை | எதிர்வரும் காலத்தில் மாகாணங்களின் பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | மெய்மையாய்வு அறிக்கைகளை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | உபகரணங் களும் கருவிகளும் | 2,334,110 | உபகரணங்கள் மற்றும் கருவிகளை கைப்பணியாளர்களுக்கு கையளிக்கப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | கைப்பணியாளர் எழுத்துமூலமாக கையேற்றதாக எழுத்துமூல சான்றுகளைப் பெற்றுக்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பிரிவு மற்றும் 9.8 ஆம் பிரிவு | இப்பிரிவுகளுக்கு முரணாக இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற கண்காட்சியொன்றுக்கு சமூகமளித்த உத்தியோகத்தர் களுக்காக ரூபா 35,620 கூட்டுத் தொகையான குளிர் தாங்கும் அடைகளுக்காக படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டிலிருந்து குளிர்தாங்கும் ஆடைகளுக்கான படிகள் செலுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 23.18 ஆம் பிரிவு | இப்பிரிவின் பிரகாரம் நாட்டிலிருந்து வெளியேறி கழிக்கும் விடுமுறை தொடர்பாக அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மாதாந்தம் விடுமுறை தொடர்பாக அறிக்கை யொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2003 ஒக்தோபர் 28 ஆந் திகதய பீஈடீ/17 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) | ஓமானில் நடைபெற்ற இரண்டாவது தோல்பொருட்கள் கைத்தொழில் கண்காட்சியில் பங்கு பற்றுவதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்படாமல் இருந்ததுடன் தாபன விதிக்கோவைக்கு முரணாகவும் தகுதிகான் காலப்பகுதியில் சேவை புரியும் உத்தியோகத்த ரொருவர் வெளிநாட்டு சுற்றுலாவொன்றில் பங்குபெறச் செய்து ரூபா 123,273 கூட்டுத் தொகையான கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிரு ந்தன. | இதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2019 மார்ச் 07 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த துடன் அன்றே அங்கீகாரத்திற்காக திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் குறித்த அன்னியச் செலாவணி வழங்கப்பட்டது. எனினும் இதற்காக விடுமுறை அங்கீகரிக்கப்பட மாட்டதென 2019 மே 13 ஆந் திகதி அறிவிக்கப்பட்டிருந் தது. எதிர்வரும் காலங்களில் தகுதிகான் காலப்பகுதியில் சேவை புரியும் உத்தியோகத்தர்க ளை வெளிநாடு களுக்கு அனுப்பாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இச்சுற்றறிக்கையி ன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டதன் பின் வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கா க உத்தியேகத்தர்க ளை அனுப்புவதற்கும் செலாவணியை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) | யப்பானில் சுற்றுலா வொன்றிற்காக பேரவையின் பணிப்பாளருக்கு ரூபா 44,985 ஆன அமையப் படிகள் கூடுதலாக வழங்கப்பட்டிருந்தன. | இச்சுற்றுலாவிற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் தலைவரின் கையொப்பத்துட னான கடிதமொன்று அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் அமைச்சின் தாமதம் காரணமாக பாதீட்டு பணிப்பாளருக்கு தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. இதற்கான | இச்சுற்றறிக்கையி ன் பிரகாரம் முன்னரே விண்ணப்பித்து அங்கீகாரம் பெற்றக் கொண்டதன் பின்னர் மாத்திரம் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக சமூகமளிக்க வேண்டும். மேலும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களை அடிப்படையாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அங்கீகாரம் பின்னர் கிடைத்துள்ளது. அமையப் படிகளாக USS 75 ஐ அ.டொலர் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது டன் USS 40 அங்கீகரிக்கப்பட்டு ள்ளது. அதற்காக மீண்டும் கோரலொன்று விடப்பட்டுள்ளது. | கொண்டு செலாவணியை விடுவிக்க வேண்டும். |
| (ஈ) | 2015 யூலை 14 ஆந் திகதி 03/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட முற்பணங்களை நிதி ஆண்டின் இறுதித் தினத்திற்கு முன்னர் தீர்வு செய்ய வேண்டிய போதும் 2000 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூபா 258,651 கூட்டுப் பெறுமதியான முற்பணங்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதி திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இம் முற்பணங்களை தீர்வு செய்வதற்கு தேவையான கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. ஏனைய முற்பணங்கள் நீண்டகாலமாக தீர்வு செய்யப்படாத முற்பணங்களாக காணப்படுவதால் அவை தொடர்பாக எதிர்காலத்தில் கலந்துரையாடி கணக்கு களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இச்சுற்றறிக்கை யின் பிரகாரம் முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர் செயற்பாடு நிறைபெற்ற உடன் முற்பணங்களை தீர்வு செய்வதற்கும் பழைய தீர்வு செய்யப்படாத முற்பண மீதிகளை கண்டுபிடித்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2015 யூலை 14 ஆந் திகதி 03/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) | உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டில் வெவ்வேறு செயற்பாடு களுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,666,100 பெறுமதியான முற்பணங்கள் தீர்வு செய்தல் 102 நாட்கள் முதல் 11 நாட்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | இம்முற்பணம் 10 நாட்களுக்குள் தீர்வு செய்ய முடியாமல் இருப்பதுடன் செயற்பாடு முடிவுற்றவுடன் தீர்வுசெய்யுமாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | இச்சுற்றறிக்கை யின் பிரகாரம் முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர் செயற்பாடு நிறைவுசெய்யப்பட் ட உடன் முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 688,034 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 7,068,562 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,380,528 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு மொத்த வருமானம் ரூபா 23,506,115 ஆல் குறைவடைந்திருக்கையில் மொத்தச் செலவினம் ரூபா 29,886,643 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீகிரியா தொல்பொருட்கள் கைத்தொழில் கிராமம் அமைந்துள்ள அருங்கலை பேரவையின் பொறுப்பில் நிர்வகிக்கப்படும் பொது வசதிகள் நிறுவனத்திற்கு ரூபா 249,430 கூட்டுப்பெறுமதியான மின்சாரத்தினால் இயங்கும் தளபாட வேலைப்பாடுகளுடனான 05 உபகரணங்கள் எஹலகல மரத்தளபாட வேலைப்பாட்டு கிராமத்தை திறந்து வைக்கும் போது கைப்பணியாளர்களின் பயன் பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தன. அப்பொருட்கள் கிடைக்கப் பெற்றதாக இருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன் புத்தகங்களிலும் பதிவு செய்யப்படாமல் பாதுகாப்பற்ற வகையில் வைத்திருந்த அப்பொருட்களுக்கு இடையே ரூபா 74,300 பெறுமதியான சென்டர் இயந்திரம் (Electric Sander) 2019 திசெம்பர் மாதம் அருங்கலை கிராமத்தின் வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் காணாமல் போயிருந்தது. இப்பொருள் காணாமல் போனமைக்குரியதாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த உபகரணம் பயிற்சி நிலையத்தில் செயற்படுத்தப் படும் பதிக் மற்றும் கைத்தறி பாடநெறிகளுக்காக தேவையான தையல் பயிற்சிக்கு வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இப்பொருட்களை ஆக்கபூர்வமான செயற்பாடொன்றில் ஈடுபடுத்துவுதற்கு அல்லது கைப்பணியாளர்களு க்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சீகிரியா தொல்பொருட் கைத்தொழில் கிராமத்தில் 18 விற்பனை நிலையங்கள் காணப்பட்டதுடன், அவற்றிலிருந்து 04 விற்பனை நிலையங்கள் மாத்திரம் கைப்பணியாளர்கள் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதிகமான விற்பனை கூடங்களின் கூரை உடைந்திருந்ததுடன் அவற்றில் புற்கள் முளைத்து விலங்குகள் வாழ்வது அவதானிக்கப்பட்டது. சுற்றுலா பிரயாணிகளை கவரக்கூடிய வகையில் கிராம நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ செய்யாமையால் வருமானம் இல்லாதன் அடிப்படையில் கைப்பணியாளர்கள் கூடங்களை கைவிட்டு சென்றிருந்ததுடன் இச் சொத்துக்கள் முறையான ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கும் அவற்றை பாதுகாப்பதற்கும் சபையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலா பிரயாணிகளை கவரக்கூடிய வகையில் கைப்பணியாளர்களுக்கு விற்பனை கூடங்களை வழங்கி அதனை பராமரித்து பேணிச் செல்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | முயற்சியாளர்களுக்கு கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் போது அமைச்சு நிதி ஏற்பாடுகளாக ரூபா 1,290,486 செலவிடப்பட்டு மன்னார் தாராபுரம் கிராமத்தில் கைப்பணியாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு 2019 திசெம்பர் கைத்தறி இயற்திரங்கள், தையல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி அளவில பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த இப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் செயற்பாடு 2020 யூன் மாதம் அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | இந்த உபகரணங்கள் கைப்பணியாளருக்கு எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளதுடன் அவை சிங்கர் நிறுவனத்தின் மூலம் நேரடியாக மாகாண அலுவலகங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. | கைப்பணியாளருக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் விரைவில் கைப்பணியாளர்களுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது தோல்பொருள் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தின் 4 கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக மொத்தம் ரூபா | இந்தப் பொருட்களுக்காக உறுதிச்சீட்டுக்கள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கொள்வனவு செய்து கைப்பணியாளர்களுக்கு | கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை |

| | | |
|---|---|---|
| 11,500,000 தொகை அமைச்சின் மூலம் வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அச் செயற்பாடு அருங்கலை பேரவையால் 2019 யூலை ஆரம்பிக்கப்பட்டு 2019 நவம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் அதற்குரிய சகல பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கும் கொள்வனவு செய்த சகல பொருட்களையும் பகிர்ந்தளித்தல் 2020 யூன் மாதம் அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கைப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் 25 மாவட்டங்களில் தோல் பொருட் கைத்தொழிலுடன் அண்மித்த சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கு வசதிகளை வழங்குவதன் கீழ் மூலப்பொருட்களையும் உபகரணங்களையும் வழங்குவதற்கு ரூபா 1,500,000 வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் 12 மாவட்டங்களுக்காக மொத்தம் ரூபா 576,596 செலவிடப்பட்டு மூலப்பொருட்களும் உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதன் செயன் முன்னேற்றம் 38 சதவீதமாகவும் மாவட்டத்தினை மேவுகை செய்யும் வகையில் பௌதீக முன்னேற்றம் 48 சதவீதமாக இருந்தது. | மாணவர்களின் வேண்டுகோள் உதவிப் பணிப்பாளர்கள் மூலம் அருங்கலைப் பேரவைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் குறைபாடுகள் இல்லாமல் சரியாக அனுப்பி வைக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டன. ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்காக திறைசேரியிடமிருந்து பணம் கிடைக்காமல் இருந்ததுடன் 2020 ஆம் அண்டில் முதலாவது காலாண்டில் பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கைப்பணியாளர்களுக்கு உபகரணங்களையும் மூலப்பொருட்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அருங்கலை பாதுகாப்பு காப்புறுதி முன்மொழிவு திட்டத்தின் கீழ் தோல் பொருள் கைப்பணியாளர்களுக்கு துரிதமாக காப்புறுதி முன்மொழிவொன்றினை செயற்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 3,200,000 ஆன வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் அத்தொகையில் ரூபா 150,000 தொகை மாத்திரம் செலவிடப்பட்டமையால் நிதி முன்னேற்றம் 5 சதவீதமாக இருந்தது. | காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு பணக் கொடுப்பனவிற்கு நிதிஏற்பாடு இல்லாமை காரணமாக மற்றும் கைப்பணியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் உண்மைத்தன்மையை பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் செயற்படுத்தப்பட்டுள்ளதால் 2020 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. | கைப்பணியாளர்களை பாதுகாக்கும் முறைமையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் இணைந்த நிறுவனங்கள் சட்டத்தின் 17(ஊ) பிரிவின் பிரகாரம் ‘‘கைப்பணியாளர்களுக்காக நலன்புரித் திட்டமொன்றை ஆரம்பித்தல் பேரவையின் பிரதான செயற்பாடாக இருந்தது. இச்செயற்பாட்டிற்காக வருடாந்தம் திறைசேரி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடு 2019 ஆம் ஆண்டளவில் படிப்படியாக குறைவடைந்திருந்தது.<br>கண்காட்சிகள், விற்பனை சந்தைகள் மற்றும் வியாபார சந்தைகள் மூலம் 2015 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 173,200 ஆன வருமானம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது வெவ்வேறு அனர்த்தங்களுக்கு உள்ளான 05 கைப்பணியாளர்களால் நிவாரணம் கோரப்பட்டிருந்த போதும் 2020 யூன் மாதம் வரை அக்கைப்பணியாளர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு பேரவையின் முகாமைத்துவம் செயற்பட்டிருக்கவில்லை. | நீண்ட பதிலொன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திறைசேரி நிதிஏற்பாடுகள் காரணமாக பணம் முதலீடு செய்ய முடியாமையால் 2019 ஆம் ஆண்டில் கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் கைப்பணியாளர் பாதுகாப்பு காப்புறுதி மேவுகை முறைமையொன்று செயற்படுத்துவதற்கு உள்ளதால் கைப்பணியாளர் நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | அருங்கலைகள் பேரவை சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அருங்கலை பேரவை தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு எப்போதும் செயற்பட வேண்டும். மேலும் கைப்பணியாளர்களுக்காக நிவராணங் களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மகளிர் மற்றும் முயற்சியாளர்கள் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 19,800,000 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இந் நிதியில் ரூபா 8,483,095 செலவு செய்து 05 கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. 2019 செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அடையப்பெற்ற பௌதீக செயலாற்றல் 80 சதவீதமாகவும், நிதிச்செயலாற்றல் 96 சதவீதமாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 05 மாத காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் பௌதீக செயலாற்றல் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்படாதிருந்ததுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிச் செயலாற்றல் 42 சதவீதமான குறைந்த பெறுமதியாக அவதானிக்கப்பட்டது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு சரியான புள்ளிவிபர தரவுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் ஒரே செயற்பாட்டின் செயன் முன்னேற்றம் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக சமர்ப்பிக்க கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தோல்பொருள் கைத்தொழிலுடன் அண்மித்த சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கு வசதிகளை வழங்குவதன் (மூலப்பொருள் / உபகரணங்கள்) கீழ் ரூபா 2,300,000 ஆன வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்து 600 கைப்பணியாளர்களுக்கு நல்னகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் போது அதில் ரூபா 629,000 செலவிடப்பட்டு 31 நலனாலிகளுக்கு நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் நிதிச் செயலாற்றல் 27 சதவீதமாக இருந்ததுடன் பௌதீக செயலாற்றல் 5 சதவீதமாக இருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றுவதற்கும் தோல்பொருள் கைத்தொழிலுடன் இணைந்த சுயதொழில்களை ஆரம்பிப்தற்கு வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் இந்தியாவில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச அருங்கலை விருது வழங்கல் விழாவிற்கு சமூகமளிப்பதற்காக உள்நாட்டு நிதியம் இல்லாத சந்தர்த்ப்பத்தில் பணம் இருப்பதாக குறிப்பிட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியில் பேரவையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையும் விலகியிருந்ததுடன் அரச சேவையாளர்களுக்கு வெளிநாடு செல்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அருங்கலை பேரவையின் வெவ்வேறு செயற்பாடுகளுக்கான அனுசரணை நிறுவனங்களிடமிருநது உதவித் தொகையால் கட்டியெழுப்பட்டிருந்த அனுசரணை நிதியத்திலிருந்து ரூபா 288,018 கூட்டுத்தொகையை மேற்படி சுற்றுலாவிற்காக பணிப்பாளரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இவ்விழாவிற்குரியதாக அருங்கலை பேரவைக்கு நன்மதிப்பினை பெற்றுத்தந்த கைப்பணியாருக்கு வெளிநாடு செல்வதற்கு தேவையான நிதிஏற்பாட்டை வழங்க இயலுமை இல்லையென கைப்பணியாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் கைப்பணியாளரின் வலுவூட்டலுக்காக அமைக்கப்பட்டுள்ள அருங்கலை பேரவை மற்றும் அதன் உத்தியோகத்தர்கள் கைப்பணியாளர்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட அனுசரணை நிதியத்தின் | விருதினை வென்ற கைப்பணியாளர் பேரவைக்கு அழைக்கப்பட்டதுடன் வெளிநாட்டு பிரயாணத்திற்கான விருப்பம் தொடர்பில் கேட்கப்பட்டது. எனினும் தமது சொந்த பணத்தினை இதற்காக செலவிட முடியாதெனவும் தனியாக பிரயாணிக்க முடியாதெனவும் கைப்பணியாளரால் குறிப்படப்பட்டது. எனினும் அவரின் நிர்மாணத்தை எடுத்துச் செல்வதற்கும் வென்ற விருதினை எடுத்து வருவதற்கும் தேவை இருப்பதால் சபையின் பணிப்பாளர் இதற்காக சமூகமளித்திருந்தார். | அரசின் ஆலோசனை மற்றும் பேரவையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் ஆலோசனையின்றி செயற்படக்கூடாததுடன் விருதினை் உரித்தாக்கிக் கொண்ட கைப்பணியாளர் / பெண் கைப்பணியாளர் சுற்றுலாவிற்காக பங்குபெறச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அனுசரணை நிதியத்தின் பணம் அது தாபிக்கப்பட்ட நோக்கத்திற்கான செயற்பாடுகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தை கைப்பணியாளர்களின் வலுவூட்டலுக்காக பயன்படுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | சட்டமா அதிபரினதும் வரிசை அமைச்சின் செயலாளரினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் ஜப்பானின் ''ஆசிய பசிபிக் வலயத்தின் தொட்டுணர முடியாத கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச ஆராய்ச்சி நிலையம்'' உடன் இணைக்காப்பட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. போராட்டங்களினால் பாதிப்பிற்குட்பட்ட ஆசிய நாடுகளின் தொட்டுணர முடியாத கலாசார உரிமைகளை துரிதமாக பாதுகாப்பதற்கான ஆய்வொன்றை மேற்கொள்ளல் இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். அந்த ஆராய்ச்சி அறிக்கையை தயாரித்தல் மற்றும் ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 79,651 மற்றும் ரூபா 368,169 செலவிடப்பட்டிருந்தது. | இதற்காக நீண்ட பதிலொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் இப்பதிலில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடல் அவசர தேவைப்பாடொன்றாக கருதி சட்ட உத்தியோகத்தரின் பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கும் தாமதமாக இருந்ததால் சட்டமா அதிபரின் ஆலோசணைகளைப் பெற்றுக்கொள்ளாமல் இந்த உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மூலதன செலவின விடயத்தினாலான ஏனைய வெளிநாட்டு கண்காட்சிகளுக்காக கிடைத்த நிதிஏற்பாடுகளிலிருந்து இச்செலவினத்தை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆய்வு அறிக்கையை துரிதமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டமா அதிபரின் ஆலோசணைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம் வெளிநாடுகள் மற்றும் அமைப்புக்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட உடன்படிக்கைகளுக் கு மாத்திரம் அரச பணம் செலவு செய்யப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொல்கொல்ல அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2016 திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி ரூபா 459,900 தொகை செலவிடப்பட்டு 10 சிங்கர் தையல் இயந்திரங்களும் 01 மோட்டாரும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த 10 தையல் இயந்திரங்களுக்கு மேலதிகமாக 04 சாதாரண தையல் இயந்திரங்கள்மற்றம் 04 சிக்செக் இயந்திரங்கள் உட்பட 18 இயந்திரங்கள் கைப்பணியாளர்களின் தேவைப் பாட்டிற்காக பகிர்ந்தளித்தல் அல்லது கைப்பணியாளர்களின் பயிற்சிக்காக பயன்படுத்தாமல் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மீளாய்வாண்டு வரையிலும் பொல்கொல்ல மாகாண பயிற்சி பிரிவினுள் எவ்வித ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கும் பயன்படுத்தாமல் அவை பொதி செய்யப்பட்ட பெட்டிகளிலேயே விளைவற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. | இந்த உபகரணங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் முறையான திட்டமொன்றை தயாரித்து தேவைப்பாட்டினை இனங்கண்டு உபகரணங்களை கொள்னவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசின் பணத்தை பயன்படுத்தி கைப்பணியாளர்களை பயிற்சியளிப்பதற்கும் கைக்பணியாளர்களு க்கு வழங்குவதற்கும் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்துவுதற்கு முகாமைத்துவம் செயற்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரியின் அங்கீகாரமின்றி வெளிநாட்டு சுற்றுலாவொன்றிற்காக மீளாய்வாண்டில் அருங்கலை பேரவையால் ரூபா 123,273 கூட்டுத்தொகையான கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த சுற்றுலாவிற்காக சமூகமளித்த தகுதிகான் காலப்பகுதியில் சேவை புரிந்த உத்தியோகத்தர் சுற்றுலா நிறைவு பெற்று 04 மாதங்களுக்கு பின்னர் சேவையிலிருந்து விலகியிருந்தார். இச்சுற்றுலாவிற்காக செலவிடப்பட்ட விளைவற்ற செலவினம் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை. | இந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து கேட்டு விலகியுள்ளதுடன் குறித்த தீர்வுசெய்தல் நடவடிக்கைகள் மேறகொள்ளும் வரை இராஜினாமாவை ஏற்றுக்கொள்ள முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதக்கோவை மற்றும் வெளிநாட்டு பிரயாணங்களுக்காக செல்லுபடியான சுற்றறிக்கைகளுக்கு இணங்க மாத்திரம் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பங்குபெறச் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,896,660 பெறுமதியான உற்பத்தி மூலப் பொருட்களாக கைப்பணியாளர் களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட வெள்ளி -- இருப்பொன்று கைப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் விளைவற்ற சொத்துக்களாக காணப்பட்டன. | இந்த வெள்ளி இருப்பு தொகுதி கைப்பணியாளர்களின் தேவைப்பாட்டின் பிரகாரம் விலை குறைக்கப்பட்டு கைப்பணியாளர்களுக்கு வழங்குவது பொருத்தமானதென பணிப்பாளர் சபை சுட்டிக்காட்டியிருந்தது. | நீண்டகாலமாக விற்பனை செய்யப்படாமல் அருங்கலை பேரவையில் உள்ள இந்த வெள்ளி இருப்பு கைப்பணியாளர்களுக்கு சட்டரீதியான அடிப்படையொன்றில் வழங்குவதற்கு செயற்படுவது பொருத்தமானதாகும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8 பிரிவின் பிரகாரம் தலைமை அலுவலக கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக உரிய காலஎல்லைக்குள் நீடிப்பதற்குரிய செயலாற்றல் பிணை பொறுப்பின் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.10 பிரிவின் பிரகாரம் பொருட்களை வழங்கும் ஒப்பந்தத்திற்கான ஒப்பந்தங்களின் போது மதிப்பிடப்பட்ட ஒப்பந்த தொகையில் 10 சதவீதத்திற்கு குறையாத பொருத்தமான பாதுகாப்பு பிணையொன்று பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். பெறுகை வழங்கும் போது குழுத் தீர்மானங்களில் செயலாற்றல் | அபிவிருத்தி செயற்பாடுகளை துரிதமாக மேற் கொள்ளும் நோக்கில் இவ்வாறு ஒரு மாதத்திற்கு குறைந்த காலப்பகுதிக்குள் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. செயலாற்றல் பாதுகாப்பு பிணையை பெற்றுக் கொள்வதற்கும் ஒப்பந்த உடன்படிக்கையொன்றுக்கு வருவது நடைமுறை ரீதியாக | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாப்பு பிணை பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கையில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக அவ்வாறான செயலாற்றல் பாதுகாப்பு பிணையொன்று பெற்றுக்கொள்ளாமல் ரூபா 14,650,476 ஆன பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | மேற் கொள்வதில் சிரமமாக இருந்தது. | |
| (இ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.3 பிரிவு மற்றும் பெறுகை குழுத் தீர்மானங்களின் பிரகாரம் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அவ்வாறு ஒப்பந்த உடன்படிக்கையொன்றை மேற்கொள்ளாமல் ரூபா 8,779,316 கூட்டுப்பெறுமதியான பொருட்கள் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | அபிவிருத்தி செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளும் நோக்கில் இவ்வாறு ஒரு மாதத்திற்கு குறைந்த காலப்பகுதிக்குள் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. செயலாற்றல் பாதுகாப்பு பிணையை பெற்றுக்கொள்வதற்கும் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்வது நடைமுறை ரீதியாக மேற்கொள்வது சிரமமாக இருந்தது. | பெறுகை செயற்பாடுகள் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 ஆம் பந்தியின் பிரகாரம் வேலைகளுக்காக விதந்துரைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வேலை பூர்த்தி செய்யும் சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளாமல் ரூபா 3,104,426 பெறுமதியான பிரதான அலுவலக கட்டிட நிர்மாணத்தின் கிரயமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக எழுத்துமூல சான்றுகள் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | பதிலுடன் எந்தவொரு எழுத்துமூல சான்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை ல. பெறுகை செயற்பாடுகள் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அருங்கலை பேரவையின் பதவியணியினர் தொடர்பாக பரீட்சித்த போது இரண்டாம் மட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 219 ஆக இருந்ததுடன் அம்மட்டத்தில் உள்ளவாறான எண்ணிக்கை 174 ஆக இருந்தது. அதன் பிரகாரம் அம்மட்டத்தில் ஊழியர்களில் 45 பேர் பற்றாக்குறையாக இருப்பது அவதானிக்கப்பட்டது. இப்பதவியணி பற்றாக்குறை நிறுவகத்தின் | ஆரம்ப மட்டத்தின் ஊழியர்கள் திறைசேரி செயலாளரின் 2019 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் தற்போது ஆட்சேர்ப்பு இடை நிறுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விசெட அங்கீகாரமொன்றின் பேரில் ஆட்சேர்ப்பதற்கு உள்ளது. எஞ்சிய பதவிகளை நிரப்புவதற்காக உரிய அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் நடவடிக்கை | நிறுவகத்தின் நோக்கங்களை ஒழுங்காக கைப்பணியாளர்களுக்கு நிறைவேற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் போதுமான பதவியணியொன்றை ஆட்சேர்ப்பதற்கு உயர் முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயலாற்றலை நிறைவேற்றும் போது தாமதங்களுக்காக காரணமாக இருந்தன. | எடுக்கப்படும். | |

4. **கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அருங்கலைகள் பேரவையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் வழங்கப்பட்டிருந்த 18 கணக்காய்வு விசாரணைகளில் 17 இற்கு பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவின் செயற்பாட்டை முகாமைத்துவத்தினால் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறுவனத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்காத உரிய உத்தியோகத்தர்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | உள்ளக கணக்காய்வு பிரிவு முறையான மேற்பார்வையுடன் நிர்வகித்து பராமரிப்பதற்கும் அப்பிரிவுகளின் கண்டு பிடிப்புக்களை நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கும் தவறுகள், குறைபாடுகளை சரி செய்வதற்கும் முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |

4.2 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 செலவின விடயங்களுக்குரிய ரூபா 4,108,541 கூட்டுப்பெறுமதியான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை மிகைத்து செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இச்செலவின விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கையை மிகைத்த உள்ளவாறான செலவினம் 15 சதவீதம் முதல் 341 சதவீதம் வரையான வீச்சில் வியாபித்து காணப்பட்டதால் முன்னைய ஆண்டு உட்பட மீளாய்வாண்டிலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்ப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது | பாதீட்டின் மதிப்பீட்டு எல்லைக்குள் செலவினங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |